



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2025) சென்னை, கிண்டி, கத்திப்பாரா பகுதியில் மாதவரம் – சோழிங்கநல்லூர் வழித்தடத்தில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆளுநர் மாளிகை ஆர்.எஸ்.எஸ். பயிற்சிக் கூடமா?

## கேரள முதல்வர் பினராயி விஜயன் குற்றச்சாட்டு!

திருவனந்தபுரம், ஜூன் 20 -

ஆளுநர் மாளிகையை ஆர்.எஸ்.எஸ். பயிற்சிக் கூடமாக மாற்ற கேரள ஆளுநர் முயற்சிப்பதாக அம்மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் குற்றம் சாட்டி உள்ளார்.



கேரள ஆளுநர் மாளி கையில் நடைபெறும் நிகழ்ச்சி களில், காவிக் கொடி ஏந்திய பாரத மாதாவின் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்த வேண்டும் என்ற நடைமுறையை ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் கொண்டு வந்துள்ளார்.

இதற்கு கேரள முதல மைச்சர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆளுநர் மாளிகையை ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சிகளுக்கான அலுவலகமாகவோ, அரசி யல் நடவடிக்கைகளுக் கான இடமாகவோ மாற்ற முடியாது எனத் தெரிவித் தார்.

ஆளுநரின் இந்த செயல் அரசியல் சாசனத்துக்கு சவால் விடுவதாகும் என் றும் அவர் விமர்சித்தார்.

பாரத மாதா கையில் உள்ள கொடி ஆர்.எஸ். எஸ். அமைப்பின் கொடி என்பது அனைவருக்கும் தெரியும் என்ற பினராயி விஜயன், ஆர்.எஸ்.எஸ். தனது சின்னங்களை பயன் படுத்துவதை யாரும் எதிர்க்கவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆர்.எஸ்.எஸ். நடைமுறை களை ஆளுநர் மாளிகை யில் பயன்படுத்துவதை யும், மற்றவர்கள் மேல் திணிப்பதையும் ஏற்க முடியாது என்றும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கூறினார்.

1925ல் உருவான ஆர். எஸ்.எஸ்., சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை தான் மேற்கொண்டதாகவும், அரசியல் சாசனம் உருவான போது அதனையும் ஆர். எஸ்.எஸ். எதிர்த்ததாகவும் கூறிய பினராயி விஜயன், அரசியல் சாசனத்திற்கு மாற்றாக மனு தர்மத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என 1949 நவம் பர் 30ல் வெளியான ஆர். எஸ்.எஸ். பத்திரிகையான ஆர்கனைசர் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காயல்பட்டினம் நகராட்சி பகுதியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, நகராட்சி மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் பராமரிப்பு நிதியின் கீழ் ரூபாய் 5 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட இருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு படுகை கட்டுமானப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், காயல்பட்டினம் நகர்மன்றத் தலைவர் முத்து முஹம்மது, திருச்செந்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஸ், நகரச் செயலாளர் வாள் சுடலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தி.மு.க.

இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
| --- | --- | --- | --- |
| 28.06.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | திருநெல்வேலி கிழக்கு | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திலுள்ள நாங்குநேரி மற்றும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
| --- | --- | --- | --- |
| 28.06.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | நாங்குநேரி | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |
| 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | அம்பாசமுத்திரம் | எஸ்.எல்.எம்.திருமண மண்டபம், வீரவநல்லூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்தபின்

# 15 நாட்களுக்குள் வாக்காளர் அடையாள அட்டையைப் பெறலாம்!

## இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூன் 20 -

EPIC வழங்குவதை விரைவுபடுத்தும் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையாக வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்த பின் 15 நாளுக்குள் வாக்காளர் அடையாள அட்டையை (EPIC) பெறலாம் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதன் விபரம் வருமாறு:

வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் (EPIC) விரைவாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்தியத் தேர்தல் ஆணையம் புதிய செயல்முறை (SOP) ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இத்தகவலின் அடிப்படையில், புதிய வாக்காளர் சேர்க்கை அல்லது ஏற்கனவே உள்ள வாக்காளர் விவரங்களில் மாற்றம் செய்யப்படும் போது, வாக்காளர் பட்டியலில் அந்தத் திருத்தம் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும். இந்த முயற்சி, வாக்காளர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் பல நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இது, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மற்றும் தேர்தல் ஆணையர்களான டாக்டர் சுக்பீர் சிங் சந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோரால் முன்னெடுக்கப்படுகிறது.

புதிய முறையில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை, செயலாக்கம் முதல் தபால் துறையின் மூலமாக வாக்காளரிடம் வழங்கப்படும் வரை ஒவ்வொரு கட்டமும் நேரடியாக கண்காணிக்கும் வகையில் இருக்கும். வாக்காளர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் குறுஞ்செய்தி (SMS) வாயிலாக தகவல்களைப் பெறுவார்கள்.

இந்த நோக்கில், தேர்தல் ஆணையம் ECINet எனும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளத்தில் ஒரு தனிப்பட்ட ஐ.டி தொகுதியை (IT Module) உருவாக்கியுள்ளது. தற்போதுள்ள முறையை மாற்றி, தபால் துறையின் பயன்பாட்டு இணையதள இடைமுகம் (DOP's API) ECINet உடன் இணைக்கப்படும். இதன் மூலம் சேவை வழங்கல் மேம்படுவதுடன், தரவின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

வாக்காளர்களுக்கு வேகமான மற்றும் செயல்திறனுள்ள தேர்தல் சேவைகளை வழங்குவதே இந்திய தேர்தல் ஆணையத்தின் நோக்கமாகும். கடந்த நான்கு மாதங்களில் தேர்தல் ஆணையம் வாக்காளர்களும் பிற நபர்களும் பயனடையும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்துத்துறைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, குருவேலப்பர் கோவில் ஊராட்சியில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட திட்ட முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.ரெத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.